குத்தகை வழங்கும்முன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பொதுப்பணித் துறையைச் சார்ந்த அதிகாரிகளைக் கலந்தாலோசித்து அவர்களின் முன் ஒப்புதல் பெற்று, நீர் நிலைத் தேக்கங்களுக்கும் மற்றும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் எந்தவிதத்திலும் குந்தகம் விளையாமல் இருக்கும் இடங்களிலேதான் குத்தகை உரிமை வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள இடங்களைத் தவிர வேறு எந்த இடத்திலும் ஸ்ரீவைகுண்டம் பகுதியில் தாமிரபரணி ஆற்றுப் படுகையில் மணல் எடுக்க வேறு எவருக்கும் இதுவரை குத்தகை உரிமை வழங்கப்படவில்லை. ஸ்ரீவைகுண்டம் பகுதியில் தாமிரபரணி ஆற்றில் அனுமதிக்கப்படாத பகுதிகளில் சில நபர்கள் அவ்வப்போது கள்ளத்தனமாக மணல் எடுப்பதைக் கண்டுபிடித்து அவர்களிடமிருந்து அபராதத் தொகையாக ரூ.30,450/- வசூலிக்கப்பட்டுள்ளது. பொதுவாக, கட்டிடக் கட்டுமானப் பணிகளுக்கு மணல் இன்றியமையாத தேவையாக இருப்பதால் ஆற்றுப் படுகையில் தேவையான மணல் எடுக்கப்படும்போது அதற்கான முன் அனுமதி வழங்கப்படும்முன் ஆற்றுப் பகுதியில் அமைந்துள்ள பாலங்கள், குடிநீர்த் திட்ட ஊற்றுக் கிணறுகள் மற்றும் ஆற்றின் கரை ஆகியவை பாதிக்கப்படாத வகையில் ஒரு பாதுகாப்புத் தூரத்தை 'சேப்டி டிஸ்டென்ஸ்' விட்டுத்தான் பொதுப்பணித் துறை மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் ஆகியோரிடம் இருந்து ஒப்புதல் பெற்றபின்னர்தான் மணல் எடுக்க குத்தகை உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. தாமிரபரணி ஆற்றில் ஸ்ரீவைகுண்டம் பகுதியில் ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவரால் உரிமை வழங்கப்பட்ட நபர்களால் மணல் எடுப்பதால் பொதுமக்களுக்கும், விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் கண்காணிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் யாரும் கள்ளத்தனமாக மணல் எடுக்காத வகையிலும், ஏற்கெனவே உரிமம் வழங்கப்பட்டிருப்பவர்கள் அந்த விதியை மீறாத அளவிற்கு, பாலங்களுக்கு சேதம் ஏற்படும் வகையில் மணல் எடுக்காத அளவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்பட்டு தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

## 4. விதி 110 -ன்கீழ் வருவாய்த் துறை அமைச்சரின் அறிக்கை

## நில உரிமைப் பதிவேடுத்திட்ட அமல் குறித்து

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவை விதி 110-ன் கீழ் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிவிப்பை வெளியிட அனுமதி கோரியுள்ளார். அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் அறிக்கை. நிலத்தின் மீது விவசாயிகளுக்கு இருக்கும் உரிமைக்கு அதிகாரப்பூர்வமான சான்றாக விளங்குவது அரசு வழங்குகின்ற நிலப்பட்டாவாகும். தற்சமயம் ஒவ்வொரு நில உரிமையாளருக்கும் அவருக்குச் சொந்தமான ஒவ்வொரு நிலத்திற்கும் புல எண், உட்பிரிவு, எண் வாரியாக தனித்தனியாக பட்டா வழங்கப்படுகிறது. நில உரிமையாளர்கள் தங்கள் நில மேம்பாட்டிற்கு நிதி நிறுவனங்களிலிருந்து நிதி பெறவேண்டிய தேவை ஏற்பட்டால், வருவாய்த் துறை அவர்களிடமிருந்து ஒவ்வொரு முறையும் 10.1 சிட்டா அடங்கல் நகல்கள் பெறவேண்டியிருக்கிறது. ஆனால், நில உடைமைகள் மீது நிதி நிறுவனங்கள் பணம் வழங்கும் முறையை எளிதாகவும், வழங்கப்படும் பட்டா முதல் நோட்டிலே எவர் பெயரிலே வழங்கப்படுகிறதோ அவர் பெயர் அந்த நிலத்தின் உரிமைக்கு ஒரு சான்றாவணமாக செயல்படும் கருத்தினை வழங்கவேண்டுமென்று இந்த அரசு தீர்மானித்தது.

பிற்பகல் 12.05

இந்த நோக்கத்தின் காரணமாக, தமிழகத்திலேயுள்ள நில உரிமையாளர்கள் முழுவதும் பலன் அடையக்கூடிய வகையில், பட்டாதாரர்களின் நில உடைமைகள், செலுத்த வேண்டிய நில வரி, கடன்கள், செலுத்தப்பட்ட கடன்கள் முதலிய விவரங்கள் அடங்கிய நில உரிமைப் பதிவேடு தயாரிக்கப்பட்டு, நிதியுதவி மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்கள், பத்திரப் பதிவேட்டுத் துறை மற்றும் நீதிமன்றங்கள், இப்பதிவேட்டின் அடிப்படையில் செயலாற்றக்கூடிய வகையில், அரசு 1983-ஆம் ஆண்டு சட்டத்தை நிறைவேற்றியது. இந்தச் சட்டம், இந்த நில உரிமைப் பதிவேடு சட்டம், சட்ட எண் 4/1996 என அழைக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தின்படி, இப்பதிவேடு வழங்குவதற்கு, அடிப்படை அலகாக ஒவ்வொரு வட்டமும் இருக்கும். அதன் அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்டம் குளித்தலை வட்டம், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டம் திருத்தணி வட்டம் ஆகிய வட்டங்களின் முன்னோடித் திட்டமாக அறிமுகம் செய்யப்பட்டு, இந்தத் திட்டம் நடைபெற்று வருகையில், முந்தைய அரசால், 31-5-1991-இல் நிறுத்தப்பட்டு விட்டது. ஒரு சீரிய திட்டம் நின்றுபோய் விட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆணையின்படி, இந்தத் திட்டம் மீண்டும் 8 மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கான சிறப்புப் பணியாளர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்

ஒப்புதல் அளித்தார்கள். வடாற்காடு அம்பேத்கர், திருச்சிராப்பள்ளி-பெரும்பிடுகு முத்தரையர், கரூர் தீரன் சின்னமலை கவுண்டர், பெரம்பலூர் திருவள்ளுவர், தஞ்சை மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், கோயம்புத்தூர் மாவட்டம், மதுரை ஆகிய 8 மாவட்டங்களில், விவசாய நில உரிமையாளர்களுக்கு நில உரிமைப் பதிவேடு வழங்கும் திட்டம் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது. பெரம்பலூர் திருவள்ளுவர், தஞ்சாவூர், சிதம்பரனார் மாவட்டங்களைத் தவிர, ஏனைய 5 மாவட்டங்களில், இந்தத் திட்டத்தின்கீழ் நில உரிமைப் பதிவேடு, பட்டாதரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட 3 மாவட்டங்களில், 31-3-1996-க்குள் இப்பதிவேடு வழங்கப்படும். இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்தும்போது, முதற்கட்டமாக, நாளைய தேதி வரையிலான நில மாற்றங்கள், நில உரிமைகள், பதிவேட்டில் குறிப்பிடப்படும். பின்னர், பதிவுத் துறையிலும், கடன் வழங்கும் நிறுவனங்களிலும் பதிவுகள் செய்யலாம் எனவும் முடிவு செய்யப்பட்டது. எனவே, மேற்சொன்ன 8 மாவட்டங்களில், இந்தத் திட்டம் 1-4-1993 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவுகள் 5,9,15 மற்றும் 23 நீங்கலாக மற்ற பிரிவுகள் மட்டும் நடைமுன்றப்படுத்தப்பட்டன. நில உரிமை மற்றும் இதர குறிப்புகள் படிவம் 7-இல் எழுதப்பட்டு சம்பந்தப்பட்ட பட்டாதாரர்களின் ஒப்புதல் பெற்றபின், நில உரிமைப் பதிவேடு எழுதப்பட்டு, அந்தப் பதிவேட்டில் வட்டாட்சியர்களின் கையொப்பமும் முத்திரையுடன் பட்டாதாரர்களுக்கு வழங்கப்படுகிறது. வழங்கப்படும் நில உரிமைப் பதிவேட்டில் நில உரிமையாளர்களுடைய புகைப்படமும் இடம்பெறும். இந்தச் சட்டத்தின் கீழான ஆயத்தப் பணிகள் முடிவுற்றதால், வீட்டுமனை தொடர்பான பிரிவு 23 நீங்கலாக அனைத்துப் பிரிவுகளையும் திட்டம் நடைபெறும் 8 மாவட்டங்களில் அரசுக் குறிப்புடன், ஒரு தேதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வர அரசு முடிவு செய்துள்ளது. தற்சமயம் செயல்படுத்தப்பட்டு வரும் நத்தம் நில அளவைப் பணிகள் முடிந்தவுடன், வீட்டுமனைகளும் நில உரிமைப் பதிவேட்டில் சேர்க்கப்படும். முதற்கட்டமாக, 1-3-1996 முதல் வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் நடைமுறைக்கு வரும். இந்தத் திட்டத்தின் பயன்கள், ஒரு கிராமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முழு புலன் மற்றும் உட்பிரிவுடைய உரிமையாளர்களின் பெயரைச் சரிபார்த்து, அவர்களின் நில உடைமை குறித்து நாளது தேதி வரை எல்லா விவரங்களும் கூடிய ஆவணமாக நில உரிமைப் பதிவேடு அமைகிறது. நில உரிமைப் பதிவேடு முதல் நோட்டில் அப்பதிவேடு எவர் பெயரில் வழங்கப்படுகிறதோ, அவர் உரிமைக்கு ஒரு சான்று ஆவணமாகச் செயல்படும் சட்டத் தகுதி உடையது. நிலவுடமைப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வில்லங்கங்கள் அவற்றிற்கான சான்று ஆவணமாகும்.

நிதி உதவி நிறுவனங்களும், கடன் வழங்கு நிறுவனங்களும் இப்பதிவேட்டின் அடிப்படையில் கடன் வழங்குவது எளிதாகிறது. விற்பனை, கொடை, அடமானம், சொத்துப் பரிமாற்றம் மூலமாக நில உரிமை மாற்றம் பதிவு செய்ய வேண்டுமானால், விற்பவர்களும் வாங்குபவர்களும் தங்களுடைய நில உரிமைப் பதிவேட்டை பதிவுத் துறை அலுவலகத்தில் கொடுத்தால்தான் நில உரிமை மாற்றம் பதிவு செய்வார்கள்;ரிஜிஸ்டர் செய்வார்கள். நில உரிமைப் பதிவேடு வருவாய் நிர்வாகத்துக்கு ஒரு வலுவுள்ள கருவியாக அமைகிறது. அதேபோல நில உரிமையாளர்களுக்கு நில உரிமைப் பதிவேடு நிலத்தைப்பற்றிய எல்லா விவரங்களையும் கொண்டுள்ள சட்ட ரீதியான ஒரு கணிப்பொறி, கம்பியூட்டர் மாதிரி அமைகிறது. வங்கிகளில் கணக்கு வைத்து இருப்பவர்களுக்கு வங்கிகள் வழங்கும் பாஸ் புத்தகம் எவ்வாறு பயன் அளிக்கிறதோ அதைவிட அதிகப் பயனை நில உரிமையாளர்களுக்கு நில உரிமைப் பதிவேடு அளிக்கிறது.

பிற்பகல் 12.10

இந்தப் பதிவேட்டினால், நில உரிமையாளர்கள் வேறு துறையின் உதவியை நாட வேண்டிய அவசியம் தவிர்க்கப்படுகிறது. நில உரிமையாளர்களுக்குத் தேவைப்படும் அனைத்து விவரங்களும் இந்த ஒரு பதிவேட்டிலேயே அமைந்துவிடுவதால் இது ஒரு சீரிய திட்டமாகும். பொது மக்கள் இந்த சீரிய திட்டத்தின் சிறப்புகளை நன்கு உணர்ந்து தேவையான பயன்களை அடைவார்கள் என்று இந்த அரசு நம்புகிறது.

## 5. கவன ஈர்ப்பு

### (அ) தண்ணீர் இல்லாது இருக்கும் சங்கராபுரம் வட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டிய அவசியம் குறித்து

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. இராமசுவாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. இராமசுவாமி.

*திரு. சி. இராமசுவாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சங்கராபுரம் வட்டத்தில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் நெல், கரும்பு, மணிலா காய்ந்து போய் விவசாயிகள் அவதிப்படுவது, மேற்படி பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவிப்பது குறித்து” மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.